வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 64 of 2016

வழக்கு சாட்சி - PW7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜ்குமார் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் ஓய்வு |
| தந்தை பெயர் | : | பொன்னப்பன் | வயது | : | |
| கிராமம் | : | உடுமலைப்பேட்டை | | | |
| தாலுக்கா | : | உடுமலைப்பேட்டை | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17.02.2026.

(எதிரிகள் ஆஜர்).

**முதல் விசாரணை** :

1) நான் தற்போது சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்று மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு வருகிறேன். கடந்த 17.09.2015 ஆம் தேதி காலை 8.00 மணியளவில் பல்லடம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது ரவிக்குமார் த/பெ.வேலுச்சாமி நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 1111/2015 பரிவுகள் 457,380,511 இதசவின் கீழ் வழக்கு பதிவு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து தேன் அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.ச.ஆ.5** ஆகும். அசல் முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரினை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. சுப்பிரமணியம் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்ககும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.02.17 18:43:09 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 64 of 2016

வழக்கு சாட்சி - PW 8

| பெயர் | : | திரு. ஜெயதேவி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
|---|---|---|---|---|---|
| தந்தை பெயர் | : | V.சுப்பிரமணியன் | வயது | : | |
| கிராமம் | : | பல்லடம் காவல் நிலையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17.02.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 17.02.2026.**

1) நான் தற்போது பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.சுப்பிரமணியன் இறந்துவிட்டதால் அவரது கையெழுத்தும் கையொப்பமும் எனக்கு நன்கு பரிட்சயம் வழக்கு கோப்பு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 17.09.2015 ஆம் தேதி பல்லடம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜ்குமார் அவர்களால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக அவரது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை அவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 17.09.2015 ஆம் தேதி சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் சுரேஷ் மற்றும் காளிஸ்வரன் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்துள்ளார். அவை மாதிரி வரைப்படம் **ஆ.த.சா.அ.6 ஆகும்.**

2)சாட்சிகள் ரவிக்குமார்,வேலுச்சாமி, கலாமணி,சரண்யா, சுரேஷ்,,காளிஸ்வரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 21.11.2015 ஆம் தேதி காலை 6.00 மணிக்கு ஆறுமத்தாம்பாளையம் பிரிவு ரோடு அருகே காவல் ஆய்வாளர் மற்றும்

சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜ்குமார் மற்றும், காவலர் சகிதம் புலன் விசாரணைக்காக கண்காணித்துக்கொண்டிருந்தபோது பின்னர் பெயர் விலாசம் தெரிந்துகொண்டு கார்த்திக் த/பெ.மருதையன் பர்மா காலனி திருவெறும்பூர் திருச்சி தற்போது விநாயகர் கோவில் வீத அறிவொளி நகர் பல்லடம் மற்றொருவர் நாகேந்திரன் த/பெ.மோகன் குமார் ஈஸ்வரன் கோவில் வீத அருகே பின்புறம் போலீசை கண்டவுடன் ஓட எத்தனித்தவர்களை பிடித்து விசாரிக்க பல்லடம் காவல் நிலைய சரகத்தை சேர்ந்த குற்றவாளிகள் என்று தெரிந்து K.N.புரம் லட்சுமி மில்ஸ் சாமிகவுண்டம்பாளையம், பெரும்பாளி ராயர்பாளையம் ஆகிய இடங்களில்நடைப்பெற்ற வழிப்பறி கொள்ளை , திருட்டு , திருட முயற்சி ஆகிய வழக்குகளில் சம்மந்தப்பட்ட எதிரிகள் என தெரியவந்து காலை 6.30 மணிக்கு எதிரிகள் கார்த்திக் மற்றும்நாகேந்திரன் ஆகிய இருவரையும் பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 1109/2015 சட்டப்பிரிவு 392 இதச , குற்ற எண் 1110/2015 சட்டப்பிரிவு 457,380 இதச, குற்ற எண் 1111/2015 சட்டப்பிரிவு 457,380,511 இதச மற்றும் குற்ற எண் 1120/2015 சட்டப்பிரிவு 394,உ/இ 397 இதச குற்ற எண் 1151/2015 சட்டப்பிரிவு 457,380,511 இதச வழக்குகளில் கைதிற்கான காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் நாகராஜ், சரவணன் ஆகியோர் முன்னிலையில் எதிரி கார்த்திக் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் தன்னை கூட்டிச் சென்றால் இருவரும் சேர்ந்து திருட முயற்சி செய்த இடங்களை கே.என் புரம் லட்சுமி மில் வழிப்பறி கொள்ளையில் தங்க செயினை விற்ற நகை கடையையும் சாமி கவுண்டம்பாளையத்தில் ஒரு வீட்டில் திருடி வீட்டில் இருந்த சாம்சங் செல்போனை எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் படுத்தினார். அதை காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். எதிரி கார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **ஆ.த.சா.அ.7** ஆகும். எதிரி நாகேந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **ஆ.த.சா.அ.8** ஆகும்.

எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். சாட்சிகள் கார்த்திக் சரவணனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 25.11.2015 ஆம் தேதி சட்டப்பரிவு 457,380,511 இதசவின் கீழ் குற்றப்பத்திரக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின் ஆலோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.02.17 18:43:24 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.